1993 ஏப்ரல் 16]

கருத்துக்களை எல்லாம் இன்றைக்கும் மக்கள் அறிந்து கொள்வதற்கு ஏற்ப நெடுந்தூர பஸ்களிலே வீடியோ இயந்திரங்களைப் பொருத்தி, அப்படிப்பட்ட திரைப்படங்கள் திரையிடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாப் பயணிகளைக் கவருகின்ற அளவிற்கு அந்தப் பேருந்துகள் நம்முடைய போக்குவரத்துக் கழகத்திலே இயக்கப்படுவதில்லை. இருக்கின்ற பேருந்துகள், ஸ்பேர் பஸ்கள் என்று சொல்லப்படுகின்ற அந்தப் பேருந்துகளை வைத்துக் கொண்டு, தற்காலிகமாக ஓரிரு நாட்களுக்கு நாங்கள் இயக்கிக் கொண்டு இருக்கிறோம். ஆகவே, இதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரித்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பெயரில் வைக்கவுள்ள போக்குவரத்துக் கழகத்தின் பஸ்கள் வெளி மாநிலத்திற்கு செல்ல இருப்பதால், வெளி மாநிலத்திலிருந்து வருகின்ற பயணிகளைக் கவருகின்ற விதத்தில், அந்த பஸ்களிலாவது தொலைக்காட்சிப் பெட்டிகள் வைக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம், டாக்டர், புரட்சித் தலைவியினுடைய பெயரைச் சூட்டியிருக்கிற காரணத்தாலே, எதிர்காலத்தில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வைக்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். (மேசையயத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; வினா எண் 370 டாக்டர் மு. சீனியம்மாள், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

370—

அணைப்புதூரிலுள்ள தமிழ்நாடு நூற்பாலை.

*9139—டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவிநாசித் தொகுதியில் அணைப்புதூரிலுள்ள தமிழ்நாடு நூற்பாலை மூடிக்கிடப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், நூற்பாலையைத் திறக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கோவை மாவட்டம், அவிநாசி தொகுதியில் தமிழ்நாடு நூற்பாலை 1-6-1989 முதல் தொடர்ந்து முறையாக செயல்பட்டு வருகிறது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

டாக்டர் மு. சினியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவிநாசித் தொகுதி, அணைப்புதூரில் உள்ள தமிழ்நாடு நூற்பாலை நல்ல நிலையில் இருந்தது. நிர்வாகக் குறைபாடுகளின் காரணமாகத்தான் மில்லை மூடியிருந்ததாக அறிந்தோம். இன்றைக்கு நூற்றுக்கணக்கான தொழிலாளர்களின் கஷ்டங்களையும் அவர்களுடைய வாழ்க்கை கேள்விக் குறியாக மாறி இருந்ததையும் அறிந்த பிறகு, வரலாற்றில் இடம்பெறும் அளவிற்கு தொழிலாளர்களின் உற்ற தோழராய் நின்று, யாராலும் முடியாத பின்னி மில்லினையும், ஸ்டான்டர்டு மோட்டார்ஸ் தொழிற்சாலையினையும் திறந்து, ஆயிரக் கணக்கான குடும்பங்களில் விளக்கேற்றி, இருளில் இருந்த அவர்களை வெளியேற்றி, ஆயுளுக்கும் அந்தக் குடும்பங்களின் இதயத்திலே அரசியாய் வீற்றிருக்கும் எங்கள் அன்புத் தெய்வமே, டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில்,—'மனதிற்கு மட்டும் பயந்துவிடு, மானத்தை உடலில் கலந்து விடு, இருக்கின்ற வரையில் வாழ்ந்துவிடு, இரண்டினில் ஒன்று பார்த்துவிடு' என்று வீரமறத்தியாய் வெற்றிநடை போட்டு வரும் எங்கள் இதய தெய்வத்தின் ஆட்சியில் இந்த நிகழ்ச்சியை ஏற்படுத்தியமைக்காகவும், மில்லினைத் திறந்தமைக்காகவும், அவிநாசித் தொகுதி மக்களின் சார்பாக நன்றி கலந்த கோடானுகோடி வணக்கங்களையும் எங்கள் இதய தெய்வத்தின் காலடியில் காணிக்கையாக்கி விடைபெறுகிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி சொன்னதோடு ஏதாவது ஒரு கேள்வி கேட்க வேண்டும்.

வினா எண் 371, திரு. எம். கே. பாலன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.